Registered as a Newspaper

90 A/L
Weekend Classes
கலை, வர்த்தகம்
LOGIC 9-00
ECONOMICS 10-00
ACCOUNTS 11-00
TAMIL 11-00
COMMERCE 1-00
HINDUCULTURE 1-00
NEW MASTER
INSTITUTE
1st Lane,
Power House Road,
JAFFNA.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

89 A/L
Weekend Classes
கலை, வர்த்தகம்
LOGIC -8-00
ECONOMICS-I -9-00
ACCOUNTS -10-00
TAMIL 10-00
ECONOMICS-II-11-00
COMMERCE -12-00
HINDUCULTURE- 12-00
NEW MASTER
INSTITUTE
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 28 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 28 (12 - 08 - 1988) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 155

# ஒப்பந்தம் செயற்படவில்லை
# எச்சரிக்கை தேவையாம்!

## சார்க் மாநாடு கொழும்பில் நடக்காது; ஒத்திவைக்கக் கோரினர் ஹமீத்!!

காத்மண்டு, ஆகஸ்ட் 11

இனப் பிரச்சினையைத் தீர்க்கச் செய்துகொள்ளப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்தம் உரிய விதத்தில்—எதிர்பார்க்கப்பட்டவாறு அமுல் செய்யப்படவில்லை.

எனவே சார்க் உச்சி மாநாட்டைக் கொழும்பில் நடத்துவது குறித்து எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டிய தேவை உண்டு.

அதனால் பிரஸ்தாப மாநாட்டை வேறொரு நாட்டில் நடத்துமாறோ அல்லது ஒத்திவைக்குமாறோ கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜனாப் சாஹுல் ஹமீத், இங்கு நடைபெறும் சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

அதனை ஏனைய நாடுகளின் அமைச்சர்கள் கவலையுடன் ஏற்றுக்கொண்டனர். எனினும் இன்னொரு நாட்டில் மாநாட்டை நடத்த முடியாது என்றும், இன்னொரு திகதியில் இலங்கையிலேயே மாநாடு நடைபெறவேண்டும் என்றும் — அதாவது நவம்பரில் நடைபெற இருந்த மாநாட்டை ஒத்திப்போடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட இரண்டு நாள் மாநாடு நேற்றுக் காத்மண்டுவில் ஆரம்பமானது.

அங்கு இலங்கை அமைச்சர் ஹமீது பேசுகையில சொன்னதாவது:-

உச்சிமாநாடு இன்னொரு திகதிக்கு ஒத்திப்போடப்படவேண்டும்.

அல்லது இன்னொரு நாடு குறித்த திகதியில் நடத்த முன்வரும் பட்சத்தில் அந்த நாட்டில் நடத்த இடமளிக்கப்படவேண்டும்.

உச்சிமாநாட்டை நடத்துவதற்கான ஆயத்த வேலைகளை எமது அரசு செய்துள்ளது

### மீள் பரிசீலனை

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தொடரும் தேடுதல்

யாழ்ப்பாணம், ஆக 12

திருகோணமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு, சல்லி, மூதூர் ஆகிய கிராமங்கள் புதன்கிழமை இந்திய அமைதிப் படையினரால் சோதனையிடப்பட்டன.

ஆயிரக்கணக்கான படையினர் இந்தக் கிராமங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர் என்றும்-சந்தேகத்திற்குரியவர்களாகக் கருதப்பட்டோர் முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் என்றும்-அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சோதனை நடவடிக்கையை ஆட்சேபித்து திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரணி, மறியற்போர் ஆகியவற்றை நடத்தியபோதிலும் அது குறைக்கப்படவில்லை.

(ஓ-10)

## மாம்பழம் சந்தியில் கைக்குண்டு வெடித்ததால் 2 பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஆக.12

யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் மாம்பழம் சந்திக்கு அருகாமையில் நேற்று கைக்குண்டு ஒன்று வெடித்தது.

இதன் காரணமாக பொதுமக்கள் நான்கு பேர் காயமடைந்தனர்.

சில கடைகளும் சேதமடைந்தன.

நேற்றுப் பகல் சுமார் 1 30 மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து படையினர் சில நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதன் பின்னர் அப்பகுதிகளைச் சுற்றிவளைத்து படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து காயமடைந்தவர்களில் சின்னத்தம்பி நாகேந்திரம் (வயது 45), எஸ். மகாலிங்கம் (வயது 37) ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சமீபமாக அமைதிப்படையினரின் ''சென்றி'' நிலை இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-10)

### பூஸா முகாமிலுள்ள

## தமிழ் இளைஞர்களின் சாகும்வரை உண்ணாவிரதம்: ஈரோஸ் ஆதரிக்கிறது

யாழ்ப்பாணம், ஆக. 12

பூஸா முகாமில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் போராட்டத்துக்கு ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஆதரவு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக ஈரோஸ் விடுத்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியபோதிலும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி சிறையிலுள்ள அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலை என்பது இழுபறி நிலையிலேயே உள்ளது.

அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமாக இலங்கை, இந்திய அரசுகளுக்கு சகல வழிகளிலும் எடுத்துக் கூறியும் எவ்வித பலனும் கிடைக்காத இவ்வேளையில், பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்கள் 10ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளார்கள்

இலங்கை - இந்திய ஒப்பந்தப்படி எப்பொழுதோ விடுதலைசெய்யப்படவேண்டிய தமிழ் இளைஞர்களின் விடுதலையை இலங்கை அரசு தட்டிக் கழிக்கும் நோக்கோடு தொடர்ந்தும் தாமதித்து வருகிறது.

இச்செயலைக் கண்டிப்பதோடு, சாகும்வரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஆரம்ப ஆசிரியர் பதவிகள்:

## கல்வி அலுவலகம் வருமாறு வேண்டுகோள்

### கடிதம் கிடைத்தவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஆக. 12

எதிர்வரும் 17ஆம் திகதிவரையில் ஆரம்ப ஆசிரியர் பதவிக்கான அறிவித்தல் கடிதங்கள் கிடைக்கப் பெறுபவர்கள் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் சேவை முன் பயிற்சியில் கலந்து கொள்ள முடியும்

இந்தத் தகவலை யாழ் பிரதம கல்வி அதிகாரி கு. சோமசுந்தரம் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திற்கு 1053 பேர் ஆரம்ப ஆசிரியர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதுவரை இதில் பெரும்பாலானவர்களுக்கு அறிவித்தல் கடிதங்கள் வந்து சேரவில்லை.

ஆனால் தற்பொழுது இந்தக் கடிதங்கள் பல

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் அமைதிப் பேரணி பாரிஸ் நகரில் நடத்தினர்

பாரிஸ், ஆக 12

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான ஓராண்டு நிறைவு நாளான கடந்த 29ஆம் திகதி பிரான்ஸ் வாழ் ஈழத்தமிழர்கள் பாரிஸ் மாநகரில் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஈழத் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறைகளையும் அவர்கள் மீது தொடுத்துள்ள மனித வேட்டையைக் கண்டித்துமே இந்த அமைதிப் பேரணி நடத்தப்பட்டது

அடக்குமுறை நிறுத்தப்படுவதற்கு பிரெஞ்சு அரசின் உதவியை அவர்கள் நாடியுள்ளனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்ட இந்தப் பேரணி உலகப் புகழ்பெற்ற ஐபெல் கோபுர அடியிலிருந்து பிரான்ஸின் மனித உரிமைகள் நடவடிக்கை அமைச்சர் திரு பேனட் குஸ்னரின் அலுவலகத்தைச் சென்றடைந்தது

பேரணியில் சென்றவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகளையும் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் உருவப் படங்களையும் மற்றும் பல்வேறு சுலோகங்களைக் கொண்ட பதாகைகளையும் பிடித்துச் சென்றனர்.

பேரணியின் இறுதியில் நான்கு பிரதிநிதிகள் அமைச்சரின் அலுவலகத்தினுள் சென்று துணை அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மகஜரில் சுமார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



நவம்பருக்கு முன்னர் சகஜ நிலை உருவாகாது எண்டு உண்மை நிலையைச் சொல்லியிருந்தால் நல்லாய் இருந்திருக்கும். உதுவிழுந்தும் மீசையில மண் படயில்லை எண்ட கதையாய் இருக்கு.....!

## அகதிகள் திரும்ப காலக்கெடு இல்லை! இணை அமைச்சர் சொல்கிறார்

புதுடில்லி, ஆக.12

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பிச் செல்லக் காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

இவ்வாறு இணை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்தார்.

ராஜ்ய சபையில் நேற்றுப் பேசுகையில் இணை அமைச்சர் மேலும் சொன்னதாவது:

ஒருலட்சத்து 36 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியா வந்திருந்தனர்.

அவர்களில் 19 ஆயிரம்பேர் தாமாக இலங்கை திரும்பினர். இந்திய உதவியுடன் 22 ஆயிரம்பேர் திரும்பினர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவன் தவராசா விவகாரம்:

## பல்கலைக்கழக அதிகாரிகள் அமைதிப்படை அதிகாரிகள் இன்று முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், ஆக. 12

அமைதிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவன் த. தவராசா விவகாரம் குறித்து பல்கலைக் கழக முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்காக அமைதிப் படையின் தளபதி மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே இன்று யாழ் பல்கலைக்கழகத்துக்கு வருகைதரவுள்ளார்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

மாணவன் த. தவராசா அமைதிப் படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

12 - 08 - 88
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06 05முதல் 07 35வரை
ராகுகாலம்:
10.35 முதல் 12.05வரை
ஆடி அமாவாசை விரதம்

## வினாத்தாள்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஆக. 12

ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சையின் 'அரசியலும் மூலதத்துவங்களும்' பாடத்திற்கான புதிய வினாத்தாள்கள் நேற்று பலாலிக்கு வந்து சேர்ந்தன.

வினாத்தாள்கள் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகத்திடம் பின்னர் கையளிக்கப்பட்டன.

திட்டமிட்டபடி பிரஸ்தாப பாடத்திற்கான பரீட்சை இன்று நடைபெறும். இப்பாடத்திற்கென முன்னர் அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் ஏற்கனவே வெளியாகிவிட்டதால் இப்புதிய வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஓ-5)

## பூஸா சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஆக 12

பூஸா தடுப்பு முகாமில் பணிபுரிந்த ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் சமன் காமினி தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது

(ஓ-எ)

## சுழிபுரத்தில் இறுதிச் சடங்கு

யாழ்ப்பாணம் ஆக 12

பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு போ. இராசேஸ்வரனின் இறுதிச் சடங்குகள் நேற்று சுழிபுரத்தில் நடைபெற்றன.

கடந்த ஏழம் திகதி தொல்புரத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் சடலம் உறவினர்களின் வருகைக்காக நேற்றுவரை அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்தது.

வடக்கு- கிழக்குக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. மகேசன் செல்வரத்தினம் புதன்கிழமை அவரது இல்லத்துக்கு விஜயம் செய்து அஞ்சலி செலுத்தினர்.

நேற்று இந்திய அமைதிப்படையினரும் இவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

(ஓ-10)

### இந்தியா - விடுதலைப்புலிகள்

## பேச்சுக்கள் தடைப்பட்டதற்கு நட்வர்சிங் கூறும் காரணம்

புதுடில்லி, ஆக. 12

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தை தடைப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன என்பதை நேற்று ராஜ்ய சபாவில் இணை அமைச்சர் நட்வர்சிங் விளக்கினார்.

அ. தி. மு. க. எம்பி. ஆலடி அருணாவின் கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கையிலேயே இந்த விளக்கத்தைக் கூறினார் அமைச்சர்.

இணை அமைச்சர் சொன்னதாவது:—

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சாதாரண முறையில் நடத்தி வந்த பேச்சுவார்த்தைகளை அந்த இயக்கத்தின் தகாத போக்கினால் நிறுத்தி வைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்களுக்கான தொடர்பு வைக்கப்பட்டிருந்தது.

### பிடிவாதப் போக்கு

ஆனால் அந்த இயக்கத்தினரின் அறிக்கைகளைப் பார்த்தால் அவர்கள் முரட்டுப்பிடிவாதப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணப்பப் படிவங்கள்

இலங்கைப் பாடசாலை அதிபர்கள் சேவையின்
1 ஆம் 2 ஆம் 3 ஆம் தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான
விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரியில்
பெற்றுக்கொள்ளலாம்.

'ஷப்ரு' - சேவைப் பகுதி
15, 2 ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தையல்மெஷின், T. V லென்ஸ், தளபாடங்கள், றேடியோ, ஹோல்செற் மற்றும் பலவித பாவித்த பொருட்கள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ்சந்தியருகில்.) (5715)

சகல விதமான றேடியோ, வீடியோ, T.V. ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும், வீடியோ (Head) IC டிரான்சிஸ்டர், அன்ரனை பூஸ்டர்ஆகியவற்றையும் பதிவு செய்த Audio Cassets முதலியவற்றையும் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்: R.V. Centre, 1st Floor, No F6, Model Market, Jaffna. உரிமையாளர்–விசு. (5661)

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

றீக்கொண்டிஷன், ஹொண்டா C 50, C 70 C 90, Racoon விற்பனைக்கு உண்டு. திருவாசி, ஸ்தூபி, பெரியமணி, குத்துவிளக்கு, Sports Cups மற்றும் கோயில் பொருள்களும், கிடைக்கும் இடம் ஸம்ஸ் 26/B, மானிப்பாய் வீதி, கிளை:- 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5653)

### றொபி மெஷின் விற்பனை

றொபி, இனிப்புச் செய்யும் கைமெஷின் அச்சுக்கள் மற்றும் எல்லா உபகரணங்களும் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ப. செல்வம், 404, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கும் – பெருமாள் கோயிலுக்கும் இடையில்) (5675)

### கோழி விற்பனை

இன்னும் ஒரு வருடத்திற்கு முட்டை இடக்கூடிய கோழிகள் (Hy-sex Brown) விற்பனைக்கு உண்டு. ஒரு கிலோ 50/- ரூபா. தொடர்பு கொள்ளவும்:- ஆ. ...லிங்கம், 36, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம். [5720]

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

எம்மிடம் 95 வீதம் முட்டையிடும் நல்லினப் பேட்டுக்குஞ்சுகள் (ஒரு நாட் குஞ்சுகள்) விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திருமகள் ஸ்ரோர்ஸ், 705 கே. கே. எஸ். றோட், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (5714)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் செற்று (B 380 Bab - Cock) சேவல் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், புறொயலர் குஞ்சுகள் 12/8; 19/8 லும், கோல்டன் கொமட் பிறவுண் சேவல் பேட்டுக்குஞ்சுகள் 17/8; 19/8; 23/8; 27/8ம் திகதியிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும். 1. R. S. K. Farm, முருகபதி உடுவில்; 2. குபேரன் ஸ்ரோர்ஸ் கொக்குவில் சந்தி, கொக்குவில். (5668)

### குளிர்சாதனப் பெட்டி (Fridge) விற்பனை

புத்தம் புதிய 5 அடி உயரமுள்ள 9½ அடி கன அடி கொண்ட Hitachi குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு, இரட்டைக் கதவும், உறைய அனுமதியா விசிறியும் கொண்டது தொடர்பு: வே. நாகநாதன் V. M றோட், ஆத்தியடி பருத்தித்துறை. (விலை – 17,000/-) (5667)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் லக்ஷ்மி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துரு ஜெயம், கிரகதோசம் முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள் – 'சக்தி சரவணா (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய – பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம். (C/6158)

### பதவி வெற்றிடம்

யாழ் / நகரில் அமைந்துள்ள பிரபல ஏஜென்சி நிறுவனம் ஒன்றிற்கு நாளாந்த பதிவேட்டுக் கணக்கு (Stock Clerk) மற்றும் கணக்கியல் லிகிதர் (Accounts Clerk) ஆகிய பதவிகளுக்கு ஆங்கில அறிவும், தட்டச்சு வேலை தெரிந்தவர்களும் விண்ணப்பிக்கவும். 323, C/o உதயன் யாழ்ப்பாணம். (5678)

### அடையாள அட்டை தவறிவிட்டது

"செல்வி சே. சந்திரயோகம், குருக்கட்டுவீதி துன்னாலை தெற்கு, கரவெட்டி ஆகிய எனது அடையாள அட்டை 656212086 V, University Identity Card ஆகியன பலாலி வீதியில் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுது முடிச்சு மாறிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேல் விலாசத்தில் அல்லது உதயன யாழ் / காரியாலயத்தில் ஒப்படைக்கவும் நன்றி (5676)

### கல்வி - பரீட்சைகள்

பிற்மன் லண்டன் பரீட்சைகள், சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் பாடங்களில 17-7-88 ல் எமது நிலையத்தில் நடைபெற்றன. 88 டிசம்பர் பரீட்சைகளின் விண்ணப்பமுடிவு 30-9-88 மாணவர்கள் எமது நிலையத்தில் சேர்ந்து கடந்தகால வினாப்பத்திரங்களை செய்ய ஆரம்பிக்கலாம். வெளி மாணவர்களும் தோற்றலாம். S. T. C. A. 149, (37) சிவன் பண்ணை வீதி, (யாழ் மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆஸ்பத்திரி வீதி வழியாக கொட்டடி நோக்கி 200 யார்) யாழ்ப்பாணம். (5671)

### பயிற்சிகள்

Radio - T. V, Air-Condition – Refrigeration, வயறிங், வெல்டிங் வைண்டிங், மோட்டர் மெக்கானிசம், பிளம்பிங், Typing, Spoken English மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, Aid Hall, 328, நாவலர் றோட், (ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமை) Jaffna. (5496)

### A/L 89, 90 வகுப்புக்கள்

A/L89, 90 வகுப்புக்கள் வழமையான எமது ஆசிரியர் குழுவினால் நடத்தப்படுகின்றன. புதிதாக A/L 90 Pure / App Maths ஆசிரியர்: திரு. வேலாயுதம் அவர்களால் 13 – 8 – 88 சனி மாலை 4-30மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. Nagalingam Institute, Thirunelvely. (5669)

### கடை வாடகைக்கு கொடுக்கப்படும்

காங்கேசன்துறை வீதியில் கில்னர் கட்டிடத்திற்கு சமீபமாக (மனோகரா தியேட்டருக்கும், கில்னர் பில்டிங்குக்கும் இடையில்) நவீன வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு 322, C/o உதயன் யாழ்ப்பாணம். (5674)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகலவிதமான றேடியோ, வீடியோ டெக், T. V., மின் விசிறிகள், மின் அடுப்புக்கள், மின் மோட்டர்கள், ஃறஸ்குக்கர், சுமீற் மொலினெக்ஸ் கிரைன்டர்கள், எலக்ரோனிக் கல்குலேட்டர், சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடுங்கள்: விக்ரர் அன் சன்ஸ் (விக்ரேஸ்) 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/ 6051)

## கல்விச் சுற்றுலா

கைதடி, ஆக. 12

கைதடி 'ரூபன் கல்வி நிலையம்' கல்விச் சுற்றுலா ஒன்றை 15-ஆம் திகதி திங்கட்கிழமை மேற்கொள்ளவுள்ளது.

அதிபர் திரு. எஸ். சேத்திரபாலன் தலைமையில் மேற்கொள்ளவுள்ள இந்தச் சுற்றுலாவில் சுமார் 100 மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும்பங்குபற்றுவார்கள்.

## ஊர்காவற்றுறை வர்த்தக சங்கக்கூட்டம்

யாழ்ப்பாணம் ஆக-12

ஊர்காவற்றுறை வர்த்தக சங்கமும், ஊர்காவற்றுறைஉதவி அரச அதிபர் பிரிவு வர்த்தக சங்கமும் இணைந்து எதிர்வரும் 21 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பொதுக்கூட்டம் ஒன்றை நடத்த உள்ளன.

ஊர்காவற்றுறை வை.எம்.சி.எ.மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்திற்கு திரு. ஜெ. சந்திரகாந்தன் தலைமை வகிப்பார். (இ- 5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி கலாமோகினி சண்முகநாதன் (சின்னராசா) (கலா)

| தாயின் மடியில்: | அண்ணன் திருவடியில்: |
|---|---|
| 1964- 06- 19 | 1988- 07- 13 |

அன்பின் தெய்வ மகளே!
பாசத்தின் பிறப்பிடமே!
அன்பால் பண்பால் உரிய நற்குணத்தால்
எல்லோர் உள்ளத்திலும் உறைந்து
திடீரென உதிர்ந்த மலராகிவிட்ட
எங்கள் அன்பின் மகளே!
அப்பா கலங்க, அம்மா கதறியழ,
உடன் பிறந்தோர் ஏங்கியழ,
எங்கேயம்மா ஓடிமறைந்தாய்?
நாளாந்தம் கண்ணீர் சொரிந்து அண்ணனை
நாடியது அங்கே இடம் பார்ப்பதற்கா?
ஏனம்மா இவையெல்லாம் அண்ணாவிடம்
போறவளுக்கு, என்பாயே! அப்பாவிடம்
சொல்லாமல் அங்கே தான் போனாயா?
அப்பாவுக்கோர் ஆண்துணையாய் நின்றாய்,
உன் உடன் பிறந்தோர்க்கோர் நல்ல
ஆசிரியையானாய், பெற்றோர் கடமைதான்
பெரிதென வாழ்ந்தாய்! கடமை எல்லாம்
முடிந்ததென்றோ, கண்ணீருடன் விட்டுச்
சென்றாய்!

என்றும் உன் நினைவால் கண்ணீர் சிந்தும்:
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
அத்தான் அகிலன் மற்றும் உறவினர்கள்,
நண்பிகள்.

நா. சண்முகநாதன்,
பெற்றோல் செற்றடி,
மானிப்பாய். (5762)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மா. நவரத்தினசிங்கம்

| அன்னையின் அணைப்பில்: | ஆண்டவனின் ஆதரவில்: |
|---|---|
| 18 5-1940 | 25-7-1987 |

திதி: 12-8-1988

எங்கள் குடும்ப ஒளி விளக்கே
உங்கள் திடீர் மறைவால் தினமும் துயருறும்
மனைவி: ஜெகஜோதி,
மக்கள்: சாந்தி, ஜெயச்சந்திரன், ரஞ்சி,
பிதா: மாணிக்கம்; மாமனார்: பொன்னையா,
மைத்துனர்: கணேசானந்தமூர்த்தி.

'நவஜோதி வாசா' சங்கானை. (5756)

## மத்திய கல்லூரி பழைய மாணவர் ஒன்றுகூடல்

கொக்குவில், ஆக. 12

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடலும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் இம்மாதம் 27-ஆம் திகதி சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் பழைய மாணவர் மன்றத் தலைவர் வைத்திய கலாநிதி சி. விஜயராசா தலைமையில் நடைபெறும். (இ-69)

## செப்டெம்பரில் இசை, நடன நாடகப் போட்டி

மானிப்பாய் ஆக-12

கல்வி அமைச்சினால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கிடையிலான மாணவர் இசை, நடன நாடகப் போட்டிகள் இவ்வருடம் செப்டெம்பர்மாத இறுதியில் இடம் பெறும்.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோரின் விண்ணப்பங்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கும்படி பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ-90)

## பன்குளத்திலிருந்து திருமலைக்கு இடம்பெயர்வு

திருகோணமலை, ஆக. 12

பன்குளத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் உட்பட பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து திருகோணமலைக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

அங்குநாளாந்தம்இடம் பெற்றுவரும் சுற்றிவளைப்பு, தேடுதல்வேட்டை, கைது செய்தல், விசாரணைக்குள்ளாக்கப்படுதல் ஆகியவை தொடர்பாக அங்கு வாழ முடியவில்லையென பலர் கூறினர். (இ – 150)

## உபந்நியாசங்கள் புராணப்படனம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு இம்மாதம் 17ஆந் திகதி முதல் செப்டம்பர்10ஆந் திகதி வரை பிற்பகல் 3மணியில் இருந்து 4மணி வரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ''ஆத்ம ஜோதி'' ஆசிரியர் திரு. நா.முத்தையா அவர்கள் உபந்நியாசங்கள் நிகழ்த்துவார்.

தினமும் பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை புராண படனம் நிகழும். (இ–75)

## மின்தறி நெசவாளர் தேவை

பிரபல மின்தறி ஸ்தாபனத்திற்கு பெண் நெசவாளர் தேவை. குறைந்தது 2 வருட அனுபவம் வேண்டும். சம்பளம் தகுதி அடிப்படையில். தங்கும் வசதி உண்டு.

விலாசம்:
விளம்பரதாரர்,
இல: 177 C/o உதயன்.
யாழ்ப்பாணம்.
[5718]

## M 3 Travel's

பெருமையுடன் வழங்கும்

### உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

### ✶ சவூதி அரேபியா:

| | | வெற்றிடம் |
|---|---|---|
| 1. | Bulldozer Operator — (புல்டோசர் ஒப்பிறேற்ரர்) | 3 |
| 2. | Exavaor Operator (எக்ஸ்ஸவேற்ரர் ஒப்பிறேற்ரர்) | 2 |
| 3. | Crane Operator (கிறேன் ஒப்பிறேற்ரர்) | 2 |

மேற்குறிப்பிட்ட தொழில்களிற்கு எம்மிடம் ஏற்கனவே தொடர்பு கொண்டவர்கள் பிரயாணம் செய்துவிட்டனர். மிகுதி வெற்றிடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

4. Cleaners (கிளினேர்ஸ்) உடனடியாகத் தேவை.
5. Catering Helpers (சிற்றுண்டிச்சாலை உதவியாட்கள்) ஓரளவு ஆங்கில அறிவு தேவை.
6. Carpenters (தச்சு வேலையாட்கள்)
7. Mason (கட்டிட வேலையாட்கள்)

### ✶ குவைத்:

1. Cleaners:-

சம்பளம் 37 டினார். சாப்பாடு இருப்பிட வசதி இலவசம். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் தொடர் கொள்ளவும்.

✶ உங்கள் தேவை எங்கள் சேவை.

✶ நம்பிக்கை, நாணயம் என்பவற்றிக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம் இதுவே.

**M 3 TRAVEL'S**
**T. இந்திரநாதன்**
சற்குணவாசா,
காங்கேசன்துறை.
(பஸ் தரிப்பு இல. 769, 764, 763.)
(C 6164)

## மக்கள் வங்கி

## அடைவு நகைகள் மீளளித்தல்

1. **ஊர்காவற்றுறை கிளை.**

இக்கிளையில் அடைவு வைத்த நகைகளை மீளப்பெறுவதற்கு 22- 04- 88 க்கு முன்பு பணம் செலுத்தியவர்கள் அடைவு நகைகளை மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை மூலமாக இம்மாதம் 16, 7, 18, 23, 24 ஆகிய 5 தினங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

2. **சாவகச்சேரிக் கிளை, பளை கிளை.**

இக்கிளைகளில் அடைவுவைத்த நகைகளை மீளப்பெறுவதற்கு 22- 04- 88 க்கு முன்பு பணம் செலுத்தியவர்கள் அடைவு நகைகளை மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கிளை மூலமாக இம்மாதம் 16, 17, 18, 23, 24, 25, 30, 31 ம் 01- 09- 88 ஆகிய 9 தினங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்பு.**

1. மேற்கூறிய நகைகளை அடைவு வைத்து மீளப் பெறுவதற்குப் பணம் கட்டிய சகலருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. கடிதங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தாம் அடைவு வைத்த கிளைகளுடன உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
2. நகைகளைப் பெறும் திகதிகளில் காலை 9.00 மணிக்கு
   அ. தமது அடையாள அட்டை,
   ஆ. பணம் கட்டிய ரசீது,
   இ. வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் மேற்குறிப்பிட்ட நகைகளை வழங்கும் கிளைக்குச் சமுகமளிக்கவும்.
3. உரிய திகதிகளில் நகைகளை மீளப்பெறாவிடின் அவை திரும்பவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்பிற்கு அனுப்பப்படும். அதனை மீளப்பெறுவதற்குப் பலத்த சிரமம் ஏற்படலாம் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

மு. கணேசசுந்தரம்
பிரதேச முகாமையாளர்
(வட பிராந்தியம்)

(C/6148)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# JAFFNA ENGLISH ACADEMY
( A LUX IN TENEBRIS )

★ **Spoken English:** ( வயது வந்தவர்களுக்கும் வேலை பார்ப்பவர்களுக்கும் )

(1) Morning Batch:
விரிவுரைகள்: திங்கள், வெள்ளிக்கிழமைகளில் 9.00 a.m. to 11-00 a.m.
காலம்: 4 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 150/- மட்டும்.
தொடக்கம்: 15 — 08 — 1988

(2) Evening Batch:
விரிவுரைகள்: செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் 4-00 P.m. to 5-30 p.m.
காலம்: 4 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 150/- மட்டும்.
தொடக்கம்: 16 — 08 — 1988
விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

★ **Higher English Course:**
This Course Comprises the following syllabus: Shakespeare's Romeo And Juliet [Original Text], Shaw's Arms And The Man [Original Text], Jonathan Swift's Culliver's Travels [Original Text], Essays, Poetry, Precis, Idioms, Comprehension, Grammar etc.
விரிவுரைகள்: திங்கள், புதன்கிழமைகளில் 4-00 p.m. to 5-30 p.m.
காலம்: 4 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 350/- மட்டும்.
தொடக்கம்: 15 — 08 — 1988
விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

★ **Toefl:**
விரிவுரைகள்: செவ்வாய்,வெள்ளிக்கிழமைகளில் 2-30 p.m. to 4-00 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 250/- மட்டும்.
தொடக்கம்: 16 — 08 — 1988
விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

★ **Special English Course for University Students:**
விரிவுரைகள்: சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் 4-00 p.m. to 5-30 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 150/- மட்டும்.
தொடக்கம்: 20 — 08 — 1988
விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

★ **English Language (NCE) London Examination:**
Certificates to successful candidates will be issued by Pitman Examination Institute, London.
விரிவுரைகள்: சனிக்கிழமைகளில் 1.00 p.m to 2.30 p.m.
ஞாயிற்றுக்கிழமைகளில் 1.30 p.m to 3 00 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 350/- மட்டும்.
தொடக்கம்: 20 — 08 — 1988
விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

★ **G.C.E. (O/L.) English:**
விரிவுரைகள்: சனிக்கிழமைகளில் 6.30 a.m to 8-00 a.m.
வியாழக்கிழமைகளில் 4. 00 p.m. to 6. 00 p.m.
கட்டணம்: மாதாந்தம் ரூபா 35/-
தொடக்கம்: 20 — 08 — 1988
விரிவுரைகள்: கந்தையா நவரேந்திரன்

★ **Elocution:**
(1) Lower Grade:
ஞாயிற்றுக்கிழமைகளில் 10.30 a.m. to 11.30 a.m.
வியாழக்கிழமைகளில் 4.30 p.m. to 5.30 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக்கட்டணம்: ரூபா 125/-
தொடக்கம்: 21 — 08 — 1988
(2) Upper Grade:
சனிக்கிழமைகளில் 10.30 a.m. to 11.30 a.m.
வியாழக்கிழமைகளில் 3.30 p.m. to 4.30 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 125/ மட்டும்.
தொடக்கம்: 20 — 08 — 1988
ஆசிரியை: திருமதி E. R. மேதர்

★ **Spoken English:**
(1) Lower Grade:
திங்கள், புதன்கிழமைகளில் 4 00 p.m. to 5.30 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 125/- மட்டும்.
தொடக்கம்: 15 — 08 — 1988
(2) Middle Grade:
செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் 4. 00 p.m. to 5.30 p.m.
காலம்: 3 மாதங்கள்
முழுக் கட்டணம்: ரூபா 125/- மட்டும்.
தொடக்கம்: 16 — 08 — 1988
விரிவுரைகள்: திருமதி E. R. மேதர்

★ **Class Work:**
(1) Year 6 & 7
சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் 8. 00 a.m to 9. 00 a.m.
கட்டணம்: மாதாந்தம் ரூபா 25/-
தொடக்கம்: 20 — 08 — 1988
(2) Year 8 & 9
சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் 9. 00 a.m. to 10. 00 a.m.
கட்டணம்: மாதாந்தம் ரூபா 30/-
தொடக்கம்: 20 — 08 — 1988
ஆசிரியை: திருமதி E. R. மேதர்
இல. 9, நக்கா லேன்
(C6081) சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

# தொடர் போராட்டம் நடத்த பரந்தன் ஊழியர்கள் முடிவு

யாழ்ப்பாணம், ஆக. 12

பரந்தன் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்தும் தடை செய்யும் வகையில் அமைந்துள்ள அமைச்சின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ச்சியான ஆர்ப்பாட்டப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம்.

அண்மையில் நடைபெற்ற சி. எம். யூ. (இலங்கை வர்த்தக சைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்) கிளைகளின் பொது அங்கத்தவர் கூட்டங்களில் இவ்வாறு தீர்மானிக்கப் பட்டுள்ளதாக தொழிற்சாலை, தொழில்நுட்பக கிளைச் செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பரந்தன் தொழிற்சாலை 40 வருடகாலம் பழைமைவாய்ந்தது என்றும், இயந்திரங்கள் காலங் கடந்தவை என்றும், தொழிற்சாலை பல வருடங்களாக நஷ்டத்தில் இயங்கி வருவதாகவும் தவறான காரணங்களை அமைச்சு கூறுகின்றது.

பரந்தன் தொழிற்சாலை 1956ஆம் ஆண்டிலேயே ஸ்தாபிக்கப்பட்டது. 1976இல் அப்போதிருந்த அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கல் திட்டத்தின் கீழ் பல புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. 1970ஆம் ஆண்டில் இருந்து 1980ஆம் ஆண்டுவரை தொழிற்சாலை இலாபத்திலேயே இயங்கி வந்துள்ளது.

இவற்றைக் கருத்தில் கொள்ளாமல் அரசாங்கம் இத்தொழிற்சாலையை இனரீதியான கண்ணோட்டத்தில் அணுகி வருகின்றது.

தவறான கருத்துக்களைக் கூறி இத் தொழிற்சாலையை மூடிவிட்டு ''லங்கா கெமிக்கல்ஸ் லிமிட்டட்'' எனும் கம்பனி மூலமாக தென்னிலங்கையில் புதிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது.

இதன் காரணமாக இத்தொழிற்சாலையின் புனர் நிர்மாணத்துக்கான உலக வங்கியின் நிதி உதவியும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொடர்ச்சியான ஆர்ப்பாட்ட பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்படி மேலும் இவர்கள் தெரிவித்தனர். (இ - 5)

உப அஞ்சல் அதிபர்களுக்கு

# அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வின் நிலுவை இம்மாதச்சம்பளத்துடன்

தாளையடி, ஆக 12

வடமாகாண உப அஞ்சல் அதிபர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வின் நிலுவை இம் மாதச் சம்பளத் துடன் வழங்கப்படும்.

பொது நிர்வாக அமைச்சின் 327 ஆம் 387 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு உப அஞ்சல் அதிபர்களுக்கு வழங்கப்படாதது குறித்து அகில இலங்கைத் தமிழ் பேசும்உப தபாலதிபர்கள்தொழிற் சங்கம் தொழிற் சங்க தூதுக் குழுவினர் அஞ்சல் அமைச்சின் செயலாளர், அஞ்சல் மா அதிபர், அஞ்சல் திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்தனர்.

ஏனைய அரச ஊழியர்களைப் போல உப அஞ்சல் அதிபர்களுக்கும் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு வழங்கப்படும் என அஞ்சல் மா அதிபரினுல் அப்போது வாக்குறுதி அளிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள 3280 உப அஞ்சலதிபர்களுக்கும் சம்பள உயர்வின் ஒருபகுதியை 1987ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கமும், ஒருபகுதியை 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கமும், நிலுவைகளுடன் கடந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு அஞ்சல் மா அதிபர் சுற்றறிக்கை மூலம் அறிவித்திருந்தார்.

கிழக்கு மாகாண உப அஞ்சல் அதிபர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு நிலுவைகள் கடந்த மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டன என்றும் வட மாகாண உப அஞ்சல் அதிபர்களுக்கு இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டிருப்பதாகவும் அகில இலங்கை தமிழ்பேசும் உப அஞ்சல் அதிபர்கள் தொழிற் சங்கத்தின் பொருளாளர் திரு.கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் தெரிவித்தார்.

எதிர்பார்த்த சம்பள உயர்வு உப அஞ்சல்அதிபர்களுக்கு வழங்கப்படாதது குறித்தும் விடுதலைப்படி, எண்ணெய்ப் படி ஆகியவற்றில் எவ்வித உயர்வும் வழங்கப்படாதது குறித்தும் கவலை தெரிவித்த பொருளாளர்,இவைகள் பற்றி வெகுவிரைவில்தொழிற் சங்கத் தூதுக்குழு கொழும்பு சென்று அஞ்சல் திணைக்கள உயர் அதிகாரிகளைச் சந்திக்க இருப்பதாகவும் குறிப்பிட்டார். (இ-144)

## சிரமதானம் செய்த மாணவருக்கு இலவச நூல்

காங்கேசன் துறை, ஆக12

மாவை முருகன் உற்சவத்தை முன்னிட்டு வெகு சிறப்பாக சிரமதானப்பணி புரிந்த வீமன்காமம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பாடநூல்களை அன்பளிப்புச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவை ஆதீனகர்த்தா தலைமையில் திரு. வ.வைரவிப்பிள்ளை திருமதி. இ. கனகசபை, திருமதி ச. ம. கயிலைநாதன் ஆகியோர் கொண்ட குழு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (இ-68)

## ஒழுங்காக வரி செலுத்திய உப அலுவலகம் என்று மானிப்பாய்க்குப் பாராட்டு

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின்கீழ் உள்ள உபஅலுவலகங்களுள் வரிகளை ஒழுங்காகவும் கூடிய தொகையாகவும் செலுத்திய அலுவலகம் எமது மானிப்பாய் பட்டின உப அலுவலகமே.

மானிப்பாய் பட்டின வரியிறுப்பாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்ட அறிக்கையை சமர்ப்பித்து திரு. ந. விவேகானந்தராசாமேற் கண்டவாறு கூறினர்.

மானிப்பாய் பட்டின வரியிறுப்பாளர் சங்க வருடாந்தக் கூட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் திரு. என் பூரணலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிறைவடைந்த வருடத்தில் சங்கத்துக்காக அயராது உழைத்து அமரர்களான திருவாளர்கள் எஸ். ரி. சாரி, எ. சதாசிவம், சி. இராசேந்திரம், எஸ். முத்துக்குமாரசாமி, க. செல்வநாயகம், ஜி. சண்முகநாதன், எஸ். இராசதுரை ஆகியோருக்கு கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த வருட வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கிய 5 லட்சம் ரூபாவில் இரண்டு லட்சம் ரூபாவுக்கான வேலைகள் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் செயற்படுத்த முடியாது போய் விட்டது. இக்குறை நிரப்பு வேலைகளை புதிய நிர்வாகசபை செய்து முடிக்க வேண்டும் என தலைவர் திரு. என். பூரணலிங்கம் தலைமையுரையில் கேட்டுக்கொண்டார்.

★ சங்கத்தின் திருத்தி அமைக்கப்பட்ட யாப்புக்களை ஏற்றுக்கொள்வது.

★ மானிப்பாய் புளியடியில் உள்ள சந்தையில் மாட்டிறைச்சிக் கடை ஆரம்பிக்கப்படுமானல் அதனை எமது சங்கம் மூலம் எதிர்ப்பது என்ற தீர்மானங்கள் சபையில் நிறைவேற்றப்பட்டன. (இ-90)

## இடமாற்றம் ரத்துச்செய்ய கோரிக்கை

ஊர்காவற்றுறை. ஆக 12

ஊர்காவற்றுறை. நாரந்தனை பங்குத் தந்தையாக கடமையாற்றும் சுவாமி ஜேசுதாசன் அவர்களது இடமாற்றத்தை இரத்து செய்யும்படி யாழ் ஆயரிடம் மகஜர் சமர்பிக்கப்பட்டுள்ளது.

பங்குத்தந்தை ஜேசுதாசன் இம்மாதம் பதினைந்தாம் திகதி தொடக்கம் மாங்குளத்திக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (16)

## இடமாற்றம்

காங்கேசன்துறை பிரதேச சபை உப அலுவலகத்திற்குமின்சாரப்பகுதி அத்தியட்சகராக திரு. பி. ஜெயரத்தினசிங்கம் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

இங்கு முன்னர் மின்சார அத்தியட்சகராக இருந்த திரு. ஏ. சிவயோகநாதன் தெல்லிப்பழை உபஅலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (இ-68)

## அன்னையர் முன்னணியின் பணி விஸ்தரிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஆக.12

யாழ்ப்பாணம் அன்னையர் முன்னணி தனது பணிகளை விஸ்தரிக்கும்] முகமாக உதவி [illegible] களில் கிளைகளை ஆரம்பிக்க [illegible] விரும்பியவர்கள் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் இலக்கம் 3 நக்கா வீதியில் உள்ள அன்னையர் முன்னணிக் காரியாலத்[illegible] கொள்ளுமாறு அன்னையர் முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

ஹரன் வெண்திரையில்
மகத்தான 2 ஆவது வாரம்
விழாவெடுத்த, விறு விறுப்பூட்டும் குடும்பச் சித்திரம்



10. 30, 2. 30
மோகன், சுஹாசினி, செந்தில் ஸ்ரீவித்தியா நடித்த
**ஆனந்த ஆராதனை**
(5754)

## அறிவித்தல்
கொக்குவில் வைரவ கோயில் பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் இம்மாதம் 14ஆம் திகதி (14-8-88) ஞாயிறு மாலை 3 மணியளவில் மேற்படி ஆலயத்தில் நடைபெறும். அனைவரையும் சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

—பரிபாலன சபை
(5645)

## ஆங்கில வகுப்புகள்

1. Spoken English
2. G. C. E. (O/L) Dec 88
3. 10ஆம் ஆண்டு

புதிய பிரிவுகள் 17-08-1988 புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

மாணவர்கள் 15-08-1988 இற்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் பதிவு செய்யவும்.

மூன்று ஆசிரியர்களின் இணைந்த சேவை.
பிரதான ஆசிரியர்:
T. செல்லப்பா B.A (Lond) Dip Ed
இடம்: 70, மணிக்கூட்டு வீதி, (கன்னாதிட்டிச் சந்தி) யாழ்ப்பாணம்.
(5704)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செரி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®
ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.
Pfizer
சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.
®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.
Grant BJK&E PFL 1157


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

St. John's College, Jaffna
and
Chundikuli Girls' College, Jaffna

## ADMISSION - 1989

1) **Vacancies exist, ONLY in the following Classes:-**
   a) Year ONE and Year SIX (St. John's & Chundikuli Girls'-College).
   b) Year Eight (St John's College Only).

2) **Apply:-**
   i) On forms available from the respective Schools between 1st September and 14th September, 1988.
   ii) Applications on other forms will Not be considered.
   iii) Forms received after 20th of September will Not be considered.

3) **Applications must be accompanied by Birth Certificates. Forms incorrectly, or incompletely filled will be rejected.**

4) **Application forms can be obtained in person or by post:**
   i) In Person: On School days-between 9-00 a. m. and 2-00 p. m. paying Rs. 25/- for a Year ONE Form, and Rs. 50/- for a year SIX and Year EIGHT Form.
   ii) By Post: Send a stamped self addressed long size envelope enclosing Postal Order / Money Order for the respective amounts drawn in favour of the Principal of the respective School.

5) **Age Limits:**
   i) Year ONE: Applicants should have been born between 01-02-1983 and 31-01-1984.
   ii) Year SIX: Applicants should have been born ON OR AFTER 01-02-1978.
   iii) Year EIGHT: Applicants should have been born ON OR AFTER 01-02-1976

6) **Admission Test:**
   **Year SIX and Year EIGHT: Saturday, the 8th October, 1988, beginning at 8-30 a.m.**

—PRINCIPALS.

JAFFNA.
12-08-1988. (C-6082)

---

விறுவிறுப்பாக நடைபெறும்

## ஷப்ரு சுற்றுக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம் ஆக 12 'ஷப்ரு, சுற்றுக்கிண்ணத்திற்காக யாழ். ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட "நொக் அவுட்," முறையிலான கிரிக்கெட்போட்டி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரண்டாம் நாள் ஆட்டங்களில்யாழ் யங் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை தெல்லிப்பளை கிறுஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணியும்-

யாழ். 5 ஸ்ரார்ஸ்விளையாட்டுக்கழக அணியை யாழ் யங் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சென்றன.

**கிறுஸ் கொப்பர்ஸ் வெற்றி**

காலை நடைபெற்ற ஆட்டத்தில் கிறுஸ் கொப்பர்ஸ்அணி28ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

ஸ்கோர்:-

கிறுஸ் கொப்பர்ஸ் அணி 26.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்கள்.

எம். ஏ. செல்வராஜா 34, எஸ் தர்மராஜா 21 பி. கிருபாகரன் 25 ஓட்டங்கள்.

எச். ரெட்ணனந்தன் 4, எஸ். ஏ. கிளற்ஸ்ரன் 4 விக்கெட்டுக்கள்.

யங்பற்றீசியன்ஸ் அணி 28.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து116 ஓட்டங்கள்.

எம் பி. பனிஸ்ரர் 38, எச். ரெட்ணனந்தன் 24 ஓட்டங்கள்.

எஸ். தர்மராஜா 2, ஆர். ஸ்ரீதரன் 2, ஜி. சுபதாஸ் 2, பி. கிருபாகரன் 2 விக்கெட்டுக்கள்

**யங் ஸ்ரார்ஸ் வெற்றி**

மாலை நடைபெற்ற ஆட்டத்தில் யங் ஸ்ரார்ஸ் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

ஸ்கோர்:

5 ஸ்ரார்ஸ் அணி 29 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்கள்.

எஸ். சுதேசன் 41 ஓட்டங்கள்.

கே. இளங்கோ 5, கே. பகீரதன் 2 விக்கெட்டுக்கள்.

யங். ஸ்ரார்ஸ் அணி 2.9 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்கள்.

ஜெயராஜ் 55, கே. காண்டீபன் 20 (ஆட்டமிழக்காமல்) கே. செழியன் 18 (ஆட்டமிழக்காமல்) ஓட்டங்கள்.

யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டிகளுக்கு திரு. செல்வரெட்ணம், திரு. டி. எம். வேதாபரணம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (இ-)

---

## 45ஆம் நாள் நினைவு தினம்

13-08-1988



**பரஞ்சோதி நச்சினார்க்கினியன் (சப்பல்)**

தாயின் மடியில் :
24 - 09 - 1969
மக்களுக்காய் :
30 - 06 - 1988

மக்களின் முன்னேற்றிய பாதைக்காய் உன்னை இணைத்துக் கொண்டாய் அதற்காகவே உன் உயிரையும் அர்ப்பணித்துக் கொண்டாய் உன் உடல் எம்மை விட்டு மறைந்தது நீ என்றும் எம்முடன் இருப்பாய் நினைவாலே சிலை செய்வோம்.

13-08-1988 (சனிக்கிழமை) வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
**குடும்பத்தார் நண்பர்கள்.**

'இனியவனகம்'
வதிரி,
கரவெட்டி. (5759)

---

## Paris Travels

## உடனடி வேலை வாய்ப்பு

✱ குவைத்

வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்
பெண்கள் (வயது 18 — 38)
ஆங்கிலம் பேசத் தெரிவது அவசியம்

✱ பிரயாண ஒழுங்குகள் விரைவில் நடைபெறும்.

✱ சம்பளம் 35 KD.

✱ தங்குமிடம், ஏனைய சலுகைகள் உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்:
முகவர் :-

**ஐ. இதயகுமார் (நம்பியார்)**
நுணுவில் மேற்கு, சாவகச்சேரி.

தலைமை அலுவலகம் :-

**N. தவம்**
3rd Floor
113, Chatham Street,
COLOMBO - 1
(5761)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி து. அன்னபூரணம்**
(அமரர் சங்கானைத் துரையின் மனைவி)

தோற்றம்:- 4-6-1913
மறைவு:- 26-7-1987
திதி:- 12-8-1988


அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்
**பிரேமா மனோகரன்**

தேவாலய வீதி,
சங்கானை. (5648)

---

## 3ஆம் ஆண்டு இதயஅஞ்சலி



**திரு. சி. சந்திரமோகன் (கவி)**

**மண்ணில் மலர்ந்த வண்ணம்:**
27. 7. 1962 (அண்ணாசிலையடி)

**விண்ணில் விரைந்த வண்ணம்:**
17. 7. 1985 (நெதர்லாந்து)

திதி: 12. 8. 1988

குடும்பத்தின் குலவிளக்காய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் உறைவிடமாய், நன் நடத்தையின் தலைவனாய் உண்மையின் இலக்கணமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்ப் பூக்களை அர்ப்பணிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி- ச இந்திராதேவி,
மகன்— ச. பிரசாந்த்

(5717)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திரு. மயில்வாகனம் கணபதிப்பிள்ளை**
(இளைப்பாறிய பிரதம படவரைஞர், பிரித்தானிய கடற்படைத்தளம் திருகோணமலை, பிரதம நேரசூசிகையாளர்-காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை)

மண்ணில்: 05 - 03 - 1916
விண்ணில்: 13 - 07 - 1988

சத்தியத்தின் வடிவமே!

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உம் நினைவு எம்மை விட்டகலாது! எங்கள் இல்லத்தின் தெய்வமாய் விளங்கி எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்று, எம்மால் மறக்கமுடியாதவாறு உமது அன்பால் ஆட்கொண்ட அன்புத் தெய்வமே! கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து காட்டிய உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

13-8-1988 சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிமார்கள்.

"ஈஸ்வரி இல்லம்"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (5650)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
10- 02- 1949
விண்ணில்
25- 07- 1987

**திரு. வல்லிபுரம் செல்வராசா**
**திதி: 12- 08- 1988**

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், கள்ளம் சிறிதுமில்லா வெள்ளை மனதுடனே, அளவிலா அன்புதனை அள்ளி அள்ளி வீசிவிட்டு, அந்நிய ஊரிலிலே அமாவாசைத் திதியினிலே மின்னலென உமது உயிரைப் பறக்க விட்டீர்! உமைப் பிரிந்து நாமெல்லாம் உருகி மனம் வெடிக்கின்றோம். அப்பா என்றுசொல்ல அருகதையற்று விட்டோம். ஆண்டு பல கடந்தாலும் உங்கள் நினைவு நீங்காது. உங்களைப்போல் அரவணைக்க எமக்கு இவ்வுலகில் யாருமில்லை எங்கள் அப்பாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி திருமதி செல்வராசா-
விஜயலட்சுமி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

மடத்தடி லேன்,
சாவகச்சேரி. (5627)

---

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



**சின்னத்துரை சிவலோகநாதன்**
பிறப்பு: 30 - 11 - 57
இறப்பு: 26 - 7 - 87
திதி: 12. 8. 88

எங்கள் அன்பு நிலவே! அவுஸ்திரேலியாவின் சிட்னி நாட்டில் காற்றோடு காற்றாய் கலந்தீரோ! உன் உருவம்மட்டும் எங்கள் சிந்தனையில் சிலைவடிவாய்த் திரையிலே நீமட்டும் பறந்து சென்றாயோ?

உன் பிரிவால் வாடும்
-குடும்பத்தினர்
165, கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
(5642)

---

## A. A. T.
OF
SRI LANKA

**Stage I and Stage II**
**Week Day Classes Commencing**
ON
**18 th August 1988**

**North Ceylon Technical Institute**
14. St. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.
(C 6111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன் அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

**பொருள்:**

அவைக்களத்திற்கு அஞ்சித் தாம் கற்றவைகளைக் (கேட்பவர் மனத்தில்) பதியுமாறு சொல்ல முடியாதவர், உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவர்க்கு ஒப்பாவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.
12-08-1988 க. பெ. இல. 23


## வீடு கட்ட ஒரு வாய்ப்பு

சேமலாப நிதி செலுத்துவோர், அரசாங்க வங்கிகளில் இலகுவில் வீடு கட்டுவதற்கான கடன்பெறுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. தொழில் அமைச்சர் திரு. மைக்கல் பெரேரா வகுத்த இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி இருக்கிறது.

சேமலாப நிதியைப் பிணையாகச் செலுத்தி வீட்டுக் கடன் பெறுவதற்கு இந்தத் திட்டம் வகை செய்கிறது. இது சேமலாப நிதி உறுப்பினர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மத்திய தர வகுப்பையும் கீழ் மத்திய தர வகுப்பையும் சேர்ந்த மக்கள் தமது வாழ்க்கையில் ஒரு வீட்டைக் கட்டுவது என்பது பெரும் சாதனை. மாதச் சம்பளத்தை நம்பியிருக்கும் இந்த இருசாராரும், உழைப்பது சாப்பிடவும், பிள்ளைகளின் கல்விக்குச் செலவிடவுமே போதாது என்று ஆகிவிடுகிறது.

மத்திய தரத்தையும், கீழ் மத்திய தரத்தையும் சேர்ந்தவர்களில் பலர் கடன்பட்டு வாழ்க்கைச் செலவுகளை செய்வது ஒன்றும் புதியதல்ல.

இத்தகைய பொருளாதார நிலையில், வீடு கட்டுவதற்கு, ஏனையவர்களின் தயவில் தங்கியிருக்கும் துரதிர்ஷ்ட நிலையும் முன் சொன்ன இரு சாராருக்கும் உண்டு.

இவ்வாறான காரணங்களால் பலர் வீடு கட்டுவதைப் பற்றி நினைத்தும் பார்ப்பதில்லை. முதுசொத்தாகக் கிடைக்கும் வீடுகள் வந்து சேர்ந்தால் சரி, இல்லாவிடில் வாடகை வீடுகளையும், வசதி இல்லாத குடிசைகளையுமே பலர் தமது குடியிருப்புகளாக்கிக் கொண்டு கஷ்டப்படுவது கண்ணால் காணும் காட்சி.

இந்த வகையில், ஊழியர் சேமலாப நிதியைப் பிணையாக வைத்து வீட்டுக் கடன் பெறும் வசதி மத்திய தரப்பார் பலர் சொந்தத்தில் வீடு கட்டுவதற்குப் பெரும் உதவியாக இருக்கும். பிறர் தயவை நாடாமல் தமது சொந்தப் பணத்தைப் பிணையாக வைத்து வீட்டுக் கடன் பெறுவது என்பது மன நோவு எதையும் தராது. அதற்காகத் தொழில் அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் மத்திய தர வகுப்பு மக்கள், தனியார்துறை ஊழியர்கள் நன்றி உடையவர்களாக இருப்பர்.

சேமலாப நிதியை ஒய்வூதியமாக்கும் திட்டம் குறித்தும் முன்னர் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்கான திட்டமும் வகுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது ஆனால் அது இன்னமும் செயலுருப் பெறவில்லை.

அதே நிலைமை, சேமலாப நிதியைப் பிணையாக வைத்து வீட்டுக் கடன் பெறும் திட்டத்திற்கும் ஏற்பட்டுவிடக் கூடாது.

சேமலாப நிதியை ஒய்வூதியமாக்கும் திட்டத்தையும் அமைச்சரவை அங்கீகரித்து விரைவில் செயலாக்க வேண்டும்.

தனவந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்கும் திட்டங்களை மட்டும் செயற்படுத்திக் கொண்டிருக்காமல், வசதி குறைந்த மக்களுக்கும் உதவும் எண்ணத்தை அரசு மேலும் வளர்க்கட்டும்.

## நேரக் கணிப்பாளர் அலுவலகம் திறக்குக!

ஊர்காவற்றுறை ஆக 12

தீவுப்பகுதியின் முக்கிய சந்திகளில் ஒன்றான வேலணை வங்களாவடிச் சந்தியில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நேரக் கணிப்பாளர் அலுவலகமொன்றைத் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவர், பொதுமுகாமையாளர் ஆகியோருக்கு இப்பகுதி மக்களால் இது தொடர்பாக மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இ-16)

## புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி மீண்டும் இருளில் மூழ்கியது

புதுக்குடியிருப்பு ஆக 12

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு மின்சாரம் வழங்கிவந்த ஜெனரேற்றர் பழுதடைந்ததால் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீண்டும் இருளில் மூழ்கியுள்ளது.

மூன்று வருட காலத்துக்கு முன்னர் திருத்தப்படுவதற்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்ட ஜெனரேற்றர் மூன்று மாதத்துக்கு முன்னரே திருத்தப்பட்டு மின்விநியோகம் வழங்கப்பட்டது.

இப்போது மீண்டும் ஜெனரேற்றர் பழுதடைந்துள்ளதால் வைத்தியசாலை இருளில் மூழ்கியுள்ளது. (இ-186)

# அமெரிக்க நிர்ப்பந்தத்துக்குப் பணிய முடியாது;

## பாகிஸ்தான் ஜனதிபதி பதில்

இஸ்லாமபாத், ஆக. 11

பொதுத்தேர்தலில் அரசியல் கட்சிகள் போட்டியிட அனுமதிக்கும்படி அமெரிக்க காங்கிரஸ் விடுத்த வேண்டுகோளை பாகிஸ்தான் ஜனதிபதி ஸியா - உல் - ஹக் நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனதிபதி ஸியா இது சம்பந்தமாக பாகிஸ்தான் நாளிதழ் ஒன்றுக்குப் பேட்டி அளித்தார்.

''பாகிஸ்தான் இறைமையுள்ள நாடு.''

''எமக்கு எவரும் உபதேசம் செய்ய வேண்டியதில்லை. நிர்ப்பந்தத்துக்கு நாம் பணிய மாட்டோம்'' — இப்படி ஜனதிபதி ஸியா அப்பேட்டியில் தெரிவித்தார்.

நவம்பர் 16 இல் நடைபெறவிருக்கும் பாகிஸ்தான நடாளுமன்றப் பொதுத்தேர்தலில் அரசியல் கட்சிகள் போட்டியிட அனுமதிக்கப்பட வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

தேர்தல் சுதந்திரமாக, நீதியானதாக இருக்க வேண்டும் தேர்தலை மேற்பார்வையிட சர்வதேச அவதானிகள் அனுமதிக்கப்பட வேண்டும்— இப்படி அவர்கள் ஜனதிபதி ஸியா - உல் - ஹக்கைக் கேட்டிருந்தனர். (எ)

இந்திராகாந்தி கொலை வழக்கு;

## விடுதலையான பல்பீர்சிங் மதப்பிரசாரம் செய்வார்

புதுடில்லி ஆக 11

இந்திராகாந்தி கொலை வழக்கில் புதுடெல்லி சுப்ரீம் கோர்ட்டினால் விடுதலை செய்யப்பட்ட பல்பீர்சிங், எதிர்காலத்தில் மதப்பிரசாரம் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார்.

திஹார் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட பல்பீர்சிங்கை அவரின் உறவினர்கள் வரவேற்றனர். அவர் வளர்த்த நாயும் அவரை வரவேற்க சிறைக்கு வந்திருந்தது.

விடுதலையாகி வெளியே வந்த பல்பீர்சிங்கின் கையில் மதவழிபாட்டுப் புத்தகங்கள் இருந்தன.

செய்தியாளர்கள் அந்த இடத்தில் வைத்து பல்பீர்சிங்கைப் பேட்டி கண்டனர்.

பல்பீர்சிங் சொன்னதாவது.

இந்தியாவில் நீதிசாகவில்லை. எனக்கு நீதி கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

இனி பொலீஸ்துறையில் சேரமாட்டேன். நான் ஒரு மதவாதி. மனித குலத்துக்காக மதப்பிரசாரம் செய்வேன் இப்படி அவர் சொன்னார். (எ)

## படகு கவிழ்ந்தது; 28 பேரைக்காணவில்லை

கெய்ரோ, ஆக 11

எகிப்தில் நைல் நதியில் உல்லாசப் படகு ஒன்று கவிழ்ந்ததினால் 17 இத்தாலியர்களும் 11 எகிப்தியர்களும் காணமற் போய் விட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. 65 பேர் காப்பாற்றப்பட்டு விட்டனர்.

## 'ஜெயலலிதாவைக் காணவில்லை' வழக்கு சென்னை நீதிமன்றில் விசாரணை!

சென்னை, ஆக 11

'ஜெயலலிதாவைக் காணவில்லை. அவரை நேரில் காட்ட வேண்டும், — என்று கோபாலன் என்பவர் தொடர்ந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் சென்ற 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா சார்பில் சட்டத்தரணி பட்டாபிராமன் ஆஜரானார்.

அவர் நீதிபதியிடம் 'ஜெயலலிதா போயஸ் கார்டன் வீட்டில் இருக்கிறார்.

இன்று மாலை அவரைச் சந்தித்தேன். வழக்குப் பற்றிச் சொன்னேன். அவர் சிரித்தார் - என்றும் தெரிவித்தார்.

அதன் பிறகு நீதிபதி, மனுதாரரிடம் 'ஜெயலலிதாவைக் காணவில்லை என்று வேண்டுமானால் பொலீஸ் கமிஷனரிடம் புகார் கொடுங்கள்' — என்று தெரிவித்துவிட்டு வழக்கு விசாரணை இன்னொரு திகதிக்கு ஒத்தி வைத்தார். (எ)

வெளி உலகில்

அங்கோலாவில் பிரச்சினை

## யுனிட்டா கிளர்ச்சியாளருக்கு அமெரிக்க ஆயுத உதவி தொடரும்!

வாஷிங்டன், ஆக 11

அங்கோலாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டாலும் யுனிட்டா கிளர்ச்சியாளருக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்களை வழங்கி வரும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

தென் ஆபிரிக்கா, கியூபா, அங்கோலா ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த உடன்பாடு, அங்கோலாவில் இடம்பெற்றுவரும் சிவில் யுத்தத்தைக் கட்டுப்படுத்தாது என்று அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் அறிவித்திருக்கின்றார். (எ)

## காபூலில் தொடரும் தாக்குதல்

ஆப்கான் கெரில்லாக்களின் ரொக்கட் தாக்குதலுக்கு ஐவர் மரணம் அடைந்தனர்; 11 பேர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. காபூலுக்கு அருகில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

## பங்களாதேஷை விட்டு இந்துக்கள் வெளியேற்றம்

டாக்கா, ஆக 11

இஸ்லாம் அரச மதமாகப் பட்டதைத் தொடர்ந்து பங்களாதேஷில் உள்ள சிறுபான்மை இன மக்கள் பெரும் எண்ணிக்கையில் இந்தியாவுக்குச் செல்வதாக அறிவிக்கப்படுகிறது.

பங்களாதேஷ் எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான ஷேக்வாஸினா பேகம் இத்தகவலை வெளியிட்டார்.

இதனிடையில் பாடசாலைகளில் இஸ்லாம் கட்டாயமாகப் போதிக்கப்படுவதை எதிர்த்து இடதுசாரி மாணவர் டாக்காவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பத்தாயிரம் பேர் இதில் கலந்து கொண்டனர். (எ)

## முன்னாள் ஜனதிபதி மலை ஏறினார்!

வாஷிங்டன், ஆக 11

முன்னாள் அமெரிக்க ஜனதிபதி ஜிம்மி கார்ட்டர் ஆபிரிக்காவின் உயர்ந்த மலையான கிலமன்சாரோவை கடந்த ஞாயிறு ஏறி வெற்றி கண்டார்.

தான்ஸானியாவில் இந்த மலை உண்டு. இதன் வலைபம் 5,695 மீட்டர் ஆகும்.

இத்தகவலை தன்ஸானிய செய்தி ஸ்தாபனம் வெளியிட்டது. (எ)

## 'சார்க்' மாநாடு மாலைதீவில்?

'சார்க்' மாநாடு இந்த ஆண்டு இறுதியில் பாகிஸ்தான் அல்லது மாலைதீவில் நடைபெறும் என்று ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நவம்பரில் இம்மாநாட்டை நடத்த முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பாதுகாப்புக் கருதியே கொழும்பில் இந்த மாநாட்டை நடத்துவது இல்லை என்று காத்மண்டுவில் நடந்த சார்க் வெளியுறவு அமைச்சர் மட்டத்தில் முடிவு செய்யப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நடிகை வீட்டில் கொள்ளை

சென்னை, ஆ 11

நடிகை ரம்யா கிருஷ்ணன் வீட்டில் ஒரு லட்சம் ரூபா மதிப்புள்ள நகைகள் கொள்ளையிடப்பட்டன என்று முறையிடப்பட்டு உள்ளது.

முதல் வசந்தம் தம்பி தங்கக் கம்பி ஆகிய படங்களில் நடித்து இருப்பவர் ரம்யா கிருஷ்ணன். (எ)

# அறிவியல், ஆத்மீக உண்மைகள் பொதிந்த ஆடி அமாவாசை நாள்

இன்று ஆடி அமாவாசைத் தினமாகும் அதைபொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

சூரியனும் சந்திரனும் ஒரே இராசியில்—ஒரே பாகையில்— வருகின்ற ஒரு நேரமே அமாவாசையாகும்.

இந்த அமாவாசைத் திதியை இந்துக்கள் புனித தினமாக அனுஷ்டிக்கிறார்கள். எனினும் இத்தினங்களுள் ஆடி அமாவாசைத் திதிக்கு தனிச்சிறப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்துக்களின் இந்த அனுஷ்டானங்களுக்கு ஆத்மீக உண்மைகள் மட்டுமன்றி அறிவியல் உண்மைகளும் அடிநாதமாக விளங்குகின்றன.

### அறிவியல் உண்மைகள்

★ இந்துக்களால் கனத்த நாட்கள் என்று சொல்லப்படுகின்ற தினங்களில் சந்திரனின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனை மேலை நாட்டு அறிஞர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

★ சந்திரனின் நிலையைப் பொறுத்து மருத்துவப் பாதிப்புகள் மாற்றமடைவதாக எட்ஸன் ஆண்ட்ரூஸ் என்ற அமெரிக்க மருத்துவர் கூறுகின்றார்.

★ மனோதத்துவ வைத்தியத்தில் முக்கியமான அம்சங்கள் சந்திரனின் நிலையைப் பொறுத்துவதாக காால் ஜங் என்ற ஸ்பெயின் மனோதத்துவ நிபுணர் கூறுகின்றார்.

★ வளர்பிறையின் போது நாட்டில் குற்றங்கள் நிகழ்வது அதிகமாகவும், தேய்பிறையின் போது குறைவாகவும் இருப்பதாக பிரன்ஸ் நாட்டின் குற்றவியல் விஞ்ஞானி ஒருவர் கூறுகின்றார்.

மேலை நாட்டில் பல் துறைகளையும் சேர்ந்த நிபுணர்கள் இத்தகைய உண்மைகளை அறிந்து உணர்ந்து வெளியிடுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்துக்களான சோதிடக் கலை இவ்வுண்மைகளைக் கூறிவிட்டது.

### சோதிட உண்மைகள்

உருண்டை வடிவமான பூமியை 360 பாகைகளைக் கொண்டதாகையால் அதனை ஒவ்வொன்றும் 30 பாகைகளைக் கொண்டே மேடம் முதலாக மீனம் ஈறாக 312 இராசிகளாகப் பங்கிடலாம்.

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இராசியில சூரியன் பிரவேசிக்கின்றார். ஆடிமாதம் முழுவதும் சூரியன் கடக இராசியில தனது தாக்கத்தை ஏற்படுத்துவார். கடக இராசி சந்திரன் ஆட்சி பெறும் வீடு. சந்திரன மனிதனின் சித்தத்தை புத்தியை ஆளும் கிரகமாகையினால் இக்காலத்தில் மனிதனின் புத்தி அதிகமாகப் பாதிக்கப்படும்.

சந்திரனுக்கு மதி என்று வேறொரு பெயரும் உண்டு.

எனவே இக்காலத்தில் மனிதன் தனது புத்தி, சித்தம் என்பனவற்றை [illegible] வேண்டியது அவசியம் [illegible] அப்படிச் செய்யாமல் இக்காலத்தில் அவன் தனது புத்தியை சித்தத்தை சீரான பாதையில் கட்டுப்படுத்தத் தவறுவானானால் அவன் தனது பலவீனமான உணர்ச்சிகளுக்கு அடிமையாகி தனது சமுதாயத்திற்கும் தனக்கும் பெருந் தீங்கிழைக்கக் கூடிய சம்பவங்களில் ஈடுபட்டு விடுவான்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆடி மாதங்களில் (ஜூலை— ஆகஸ்ட்) நிகழ்ந்து முடிந்த சம்பவங்கள் இதற்கு நல்ல உதாரணம்.

இவ்வுண்மைகளைச் சோதிடக் கலையின் மூலம் அறிந்து கொண்ட நம் முன்னோர்கள் ஆடிமாத அமாவாசைத் திதியிலிருந்து மனிதனைத் தெய்வீக வழியில் திருப்புவதற்காக அதனைப் புனித வழிபாட்டு நாளாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

### ஆத்மீக உண்மைகள்

கிரகங்கள் யாவும் தெய்வங்களே. சிவன் சூரியனாகவும் ஈஸ்வரி சந்திரனாகவும் திருமால் புதனாகவும், இவ்வாறே ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு கிரகங்களாகவும் உள்ளனர்.

கடக இராசி ஈஸ்வரியான உமாதேவிக்குரிய வீடு. அவ்வீட்டிற்கு ஆடி மாதத்தில சூரியன் என்ற கிரக நிலையில் சிவன் பிரவேசிக்கின்றார். ஆடி அமாவசைத் தினத்தன்று உமையம்மையும் [illegible] நிலையில் அவ்வீட்டில் ஒரே நேர் கோட்டில் சங்கமிக்கின்றனர்.

இவ்வாறு உமாதேவிக்குரிய வீடான கடக இராசியில சிவனும்உமையும் ஒரே நேர் கோட்டில்-உமையம்மைக்குரிய கடக இராசியின் ஒரே நேர்கோட்டில்-இருக்கும் காலமான ஆடி அமாவாசைத் திரிநேரம் அவர்களை வழிபடுகின்ற இந்துக்களுக்குப் பேரானந்தத்தை ஏற்படுத்துகின்ற ஒரு புனித நாளாகும்.

உமையும், சிவனும் சேர்ந்து அம்மை அப்பனாகக் காட்சி தரும் நாளாகவே அதனை அவர்கள் கருதுகின்றனர்.

### பிதுர்கடன்

''புத்திரன்'' என்பது தன் பெற்றோர் நரகத்தில் இருந்து காப்பாற்றுபவன் என்பதாகும்.

தம் முன்னோரை நரகத்திலிருந்து காப்பாற்ற வேண்டியது சைவனாகப் பிறந்த ஒவ்வொருவனது கடமையாகும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் அவன், தன் முன்னோரின் நன்றி மறந்தல் என்னும் பாவத்திற்கும் அதனால் பிதிர்த் தோசத்திற்கும் ஆளாவான்.

பிதிர்த்தாசமும் அவனது மனம், புத்தி, சித்தம் என்பனவற்றையே பெருமளவில் பாதிக்கும்.

எனவே இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆடி அமாவாசைத் தினத்தன்று நாம் எம் மனம், புத்தி, சித்தம் என்பனவற்றைச் சீரான பாதையில வழிநடத்தி.-

எமது மூதாதையருக்கும் நற்பேறு கிடைக்க உரிய கிரியைகளைச் செய்வதுடன் பிதிர்த்தோசம் ஏற்படாது எம்மைப் பாதுகாப்போமாக!

கற்கோவளன்

சுன்னாகத்தின் பிரச்சினைகள்:

## பிரதேச சபை ஆணையாளரை பிரஜைகள் குழு சந்திக்கிறது

சுன்னாகம், ஆக 12

★ சுன்னாகத்தில் பால் சேகரிப்பு நிலையத்தையும் - பல் விற்பனை நிலையத்தையும் ஏற்படுத்தவேண்டும்.

★ சந்தரோடை நன்னீர் விநியோகத் திட்டத்தை சுன்னாகம் பிரதேச சபை பொறுப்பேற்று நடத்தவேண்டும்.

★ மின்சார விநியோகம் சீர்செய்யப்படவேண்டும்.

★ தெருவிளக்குகள் மறுசீரமைப்புச் செய்யப்படுதல் அவசியம்,

மேற்படி விடயங்கள் சம்பந்தமாகவலி-தெற்கு பிரதேச சபை ஆணையாளர் திரு. ஆ. மகாலிங்கத்துடன் சுன்னாகம் பிரஜைகள் குழுவினர் இன்று வெள்ளி காலை பத்துமணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் கலந்துரையாட உள்ளனர்.

சுன்னாகம் பிரஜைகள் குழுத்தலைவர் திரு தி. மாணிக்கவாசகர் தலைமையில் நால்வர் குழு சந்திப்பில் கலந்துகொள்ளும். (இ-27)

## நயினையில் ஆடிப்பூரத் திருவிழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் ஆடிப்பூரத் திருவிழா உற்சவம் எதிர் வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற வுள்ளது.

அன்றைய தினம் அம்பாளுக்கு நவோத்தர சகஸ்திர மகா சங்காபிஷேகம், பூரணாமா, இலட்சார்ச்சனை, அர்ச்சனை பூர்த்தி தீபாராதனை, ஆகியனவும்-

ஆடிப்பூர உபயகாரரினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அழகிய ''தாமரைப்பூ'' வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் அலங்கார அருட்காட்சியும் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) நடைபெறும்.

கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும்.

பக்தர்களின் நன்மை கருதி பஸ் சேவை ஒழுங்குகள் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினால் மேற்கொள்ளப் படவுள்ளன. (இ 5)

### அந்தியடிப் பிள்ளையார் ஆடிப்பூர உற்சவம்

யாழ் அந்தியடிப்பிள்ளையார் ஆலயத்தில் எதிர் வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூர உற்சவம் நடைபெறும்.

ஸ்ரீ மனோன்மணியம்மனுக்கு காலை 11 00 மணியளவில் அபிஷேக ஆராதனையுடன் 12 30 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று அம்பாள்வீதியுலா வருகின்ற அலங்காரக் காட்சியும் இடம்பெறும் (இ)

### சந்நிதி கொடியேற்றம்

இன்று சந்நிதி முருகன் கொடியேற்றத் திருவிழா நடைபெறுகிறது.

இரண்டு வருட இடைவெளியின் பின்பு தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோயில் கொடியேற்றம் இன்று நடைபெறுகிறது.

### மஹாமாரி அம்பாள் உற்சவம்

யாழ் வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்பாள் ஆலய மகோற்சவம் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமானது. நாளை சனிக்கிழமை (13 ஆம் திதி) தேர்த்திருவிழாவும், அடுத்தநாள் 14-ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்களுக்கு உறுதியும் வெண்மையும் கொடுப்பது
**அண்ணு பற்பொடி**
அண்ணு பற்பொடி தற்பொழுது மக்களின் வசதிக்கேற்ப 100g. பக்கட்டுகளிலும் வெளிவருகின்றது!
100g வெற்றுப் பைக்கட்டுகளைச் சேர்த்துக் கொடுத்து
**இனம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

# உதயன்

12 - 08 - 1988 வெள்ளிக்கிழமை

வீட்டுப் பாவனைக்கேற்ற முறையில் பைக்கட்டுகளில் வறுத்து அரைத்த
**அண்ணு மிளகாய்த் தூள்**
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளுங்கள்.
**அண்ணு கோப்பிக் கடை**
யாழ்ப்பாணம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் முக்கிய அறிவித்தல்

இத்தால் சகல போக்குவரத்து வாகனங்களும் 17-08-1988 அதிகாலை 12.01 மணியிலிருந்து 12-09-1988 நள்ளிரவு 12.00 மணிவரைக்கும் குறிப்பிடப்பட்டிருந்த பாதைகள், தெருக்கள் நல்லூர்கந்தசுவாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதனை 17-8-1988 அதிகாலை 12. 01 மணியிலிருந்து 11-09-1988 நள்ளிரவு 12.00 மணியெனத் திருத்தப்பட்டுள்ளதென்பதை அறியத்தருகின்றோம்.

**சி. வீ. கே. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(6165)

## North Lanka Medical College

### TENDER

Tenders are invited from furniture manufacturers for the supply of One hundred (100) students' Tables and Chairs as those used in Universities for Examinations. Tenders should be delivered or sent under registered cover to: Hony. Secretary, N. L. M. C.,164, Fourth Cross Street, Jaffna on or before 12 00 noon on Thursday 25th August, 1988.

Yours in Service,
**Hony. Secretary**
Board of Governors.
(C-6172)

★ **விக்னு** ★
**டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

**(கலை வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)**

**A/L கலை வர்த்தக**
**90 ஆண்டுக்கான பிரிவு 2**
**ஆரம்பம்: 13 - 8 - 88**
**[காலை 8.00]**

முக்கிய குறிப்பு :-

I. பிரிவு 1க்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
II. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது.
III. 90 ஆம் ஆண்டுக்கான [பிரிவு 2] அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(C/ 6142)

## பேச்சுக்கள்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
போக்கில் இருப்பது புலனாகின்றது.

அதே சமயம் இந்திய-இலங்கை உடன்பாட்டின் பெரும்பாலான அம்சங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு நல்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட பல்வேறு அமைப்புக்களுடன் கலந்தாலோசித்த பிறகுதான் இந்த உடன்பாடே மேற்கொள்ளப்பட்டது.

இது இலங்கைத் தமிழரின் சட்டபூர்வ உரிமைகளை நிறைவேற்றக் கூடியது.

இலங்கையில் இருந்து அமைதிப்படையை இப்போது விலக்கிக்கொள்வது விரும்பத்தக்கதல்ல.

இப்படி திரு. நட்வர் சிங் தெரிவித்தார். (ஒ-எ)

## கல்வி அலுவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
விச் சேவைகள் ஆணைக் குழுவினால் அனுப்பப்பட்டு வருகின்றன எனவே இந்தக் கடிதங்கள் 17ஆம் திகதி வரை கிடைக்கப் பெறுபவர்களே 18ஆம் திகதி ஆரம்பமாகும் சேவை முன் பயிற்சியில் கலந்துகொள்ள முடியும்.

இதேவேளையில் இதுவரையில் பிரஸ்தாப அறிவித்தல் கடிதங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் பின் வரும் திகதிகளில் தங்களுக்குக் கிடைத்த அறிவித்தல் கடிதங்களையும், அதன் போட்டோ பிரதி ஒன்றையும், அவர்களது தேசிய அடையாள அட்டையையும் கொண்டு யாழ். கல்வித் திணைக்களத்திற்குக் காலை 8-30 மணிக்கும் 12-30 மணிக்கும் இடையில் யாழ் பிரதம கல்வி அதிகாரியுடன் தொடர்பு கொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி குறிப்பிட்ட திகதிகளும், தொடர்பு கொள்ளவேண்டியவர்களின் தேர்தல்தொகுதி விவரமும் வருமாறு;-

14ஆம் திகதி :- ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, உடுப்பிட்டி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

15ஆம் திகதி:- யாழ்ப்பாணம், நல்லூர், மானிப்பாய்,கோப்பாய், சாவகச்சேரி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்தவர்கள். (ஒ-9)

## ஐ. நா. வின் செயலாளருக்கு நேரு விருது

புதுடில்லி, ஆக 12

ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலருக்கு ஜவஹர்லால் நேரு விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தியப் பணத்தில் 60 லட்சம் ரூபாவும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

நாடுகளிடையே புரிந்துணர்வை வளர்க்க உதவியதற்காகவே அவருக்கு இவ் விருது வழங்கப்படுவதாக விருதுக் கமிட்டி அறிவித்தது.

கமிட்டியின் தலைவர் இந்திய உப ஜனதிபதி சங்கர் தயாள் சர்மா ஆவார்.

ஆப்கன் தீர்வு, வளைகுடா தீர்வு ஆகியவற்றுக்கு உதவியதற்காக ஐ நா. பொதுச் செயலாளர் பாராட்டப்படுகிறார்.

## ஈழத் தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
5000 தமிழர்கள் கையொப்பமிட்டு இருந்தனர்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் தம்மாலான உதவிகளைச் செய்வதாக உறுதியளித்தனர்.

இப்பேரணி பற்றிய செய்திகள் பிரான்ஸ் வானொலியில் ஒலிபரப்பப் பட்டதோடு இங்குள்ள பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன. (அ-ஒ)

## ஒப்பந்தம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பதில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. இதனால் இம் மாநாட்டைக் கொழும்பில் நடத்தும் யோசனையை அரசு மீள் பரிசிலனை செய்தது.

இனப்பிரச்சினை சம்பந்தமான இலங்கை-இந்திய ஒப்பந்தம் எதிர்பார்க்கப்பட்டவாறு அமுல செயப்படவில்லை.

நவம்பர் மாதத்துக்கு முன்னர் நாட்டில் சஜ நிலை திரும்பக் கூடிய வாய்ப்புக் காணப்பட்ட போதிலும் சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்தும் விஷயத்தில் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது!

### தவறு

பாதுகாப்புக் காரணங்களுக்காக உச்சி மாநாட்டை ஒத்திப் போட வேண்டும் என்று அரசு கேட்டிருப்பதாகக் கூறப்படுவது தவறு.

பூரண பாதுகாப்பை வழங்கும் நிலையில் இலங்கை அரசு உள்ளது. எவ்வாறாயினும் சில குழுக்கள் அரசாங்கத்தின் தடையையும் மீறி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாம்.

இத்தகைய சம்பவங்களினால் உற்சாகமற்ற நிலை தோன்றலாம்; அது வெளிநாட்டுத்தலைவர்களுடனான நட்புறவையும் பாதிக்கும் என்றார். (அ-எ)

## தமிழ் இளைஞர்...

(1 ம் பக்கத்தொடர்ச்சி)
உண்ணவிரதப்போராட்டத்துக்கு எமது பூரண ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## பல்கலைக்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
யினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் கடந்ததிங்கட்கிழமை யிலிருந்து வகுப்புகளைப் பகிஷ்கரித்துவருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும், புதன்கிழமை பல்கலைக்கழக நிர்வாகம் ஸ்தம்பிதம் அடையும் வகையில் மறியல் போராட்டம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

பிரஸ்தாப மாணவனைக் கடந்த புதன்கிழமைக்குமுன் விடுதலை செய்யாவிட்டால் தமது போராட்டங்களை விரிவுபடுத்தப்போவதாக பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தனர். இக்காலக் கெடு முடிவடைந்துவிட்டது. (ஒ 5)

## அகதிகள்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இன்னும் 93 ஆயிரம் பேர் இந்தியாவில் தங்கி உள்ளனர்.

இவர்களில் 2 ஆயிரம் பேர் முகாம்களில் உள்ளனர்.

எஞ்சியோர் முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளனர்.

இப்படி இணை அமைச்சர் சொன்னர். (ஒ-எ)

## இன்றைய போட்டி

ஷப்ரு வெற்றிக் கிண்ணத்துக்கான யாழ். ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும், நொதேர்ண் விளையாட்டுக் சழகமும் மோதுகின்றன.

போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நண்பகல் ஒருமணிக்கு ஆரம்பமாகும். (அ)

## கரபந்தாட்டம்

கொக்குவில் ஆக 12

கொக்குவில் கிழக்கு மஞ்ஞன்மணி சன சமூக நிலையமும் இளைஞர் சங்கமும் இணைந்து கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

பதினைந்து கழகங்கள் பங்கு பற்றவுள்ள இச் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை சன சமூக நிலைய மைதானத்தில் ஆரம்பமாகிறது. (ஒ-69)

## புதிய இணைப்பதிகாரி

திருகோணமலை, ஆக. 12

திருகோணமலையின் இணைப்பதிகாரியாக பிரிகேடியர் பீ. டபிள்யூ. விமலரத்தின கடந்த முதலாம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார்.

## நெடுந்தீவுப் படகுச் சேவை தடைப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 12

கடந்த புதன்கிழமை குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் படகுச்சேவை தடைப்பட்டது. படகு துறையிலிருந்து புறப்பட அனுமதிக்கப்படவில்லை.

இதனால் நெடுந்தீவுக்குச் செல்லவென அங்கு வந்திருந்த பிரயாணிகள் குறிகாட்டுவானில் தரித்துநின்று நேற்றுக்காலை (வியாழன்) நெடுந்தீவுக்குச் சென்றனர்.

நெடுந்தீவிலிருந்து நேற்றுப் படகுகள் எதுவும் குறிகாட்டுவானுக்கு வரவில்லை.

புதனன்று தீவுப்பகுதியெங்கும் இந்திய அமைதிப்படையின் தீவிர கண்காணிப்பு இருந்தது. அங்கிருந்த படைகள் நேற்று முகாம்களுக்குத் திரும்பிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-111)

## நம்பிக்கை இல்லம் - இணுவில்

தென்னிந்திய திருச்சபையால் நடத்தப்படும் இணுவில் வைத்தியசாலையில் உள்ள நம்பிக்கை இல்லத்திற்குப் புதிதாக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள். மாணவர்கள் வலது குறைந்தவர்களாகவும், பாடசாலை செல்பவர்களாகவும், 5 — 14 வயதுடையவர்களாகவும் இருக்க வேண்டும். உணவு, உடை, பாடசாலை உபகரணங்கள், பாடசாலை செல்லும் வாகன வசதி என்பன இலவசமாக வழங்கப்படும். பிள்ளை பற்றிய முழு விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**Manager,**
House of Hope,
Inuvil,
Chunnakam.
(5721)

**A /L89-90**
குடா நாட்டின் பல்வேறு இடங்களிலுமுள்ள அனுபவமுள்ள பிரபல ஆசிரியர்கள் ஒன்றிணைகிறார்கள்.

| | |
|---|---|
| Economics | — திரு. சண் |
| Commerce | — திரு. கேசவன் |
| Accounts | — திரு. ஞானசேகர் |
| Logic | — திரு. சோதிலிங்கம் |
| Tamil | — திரு. சுந்தரலிங்கம் |
| Hindu Civil | — திரு. ஜோதீஸ்வரன் |
| Geography | — திரு. ஜேசுதாஸ் |
| Pol. Science | — திரு. நிர்மலன் |

சனி, ஞாயிறு வகுப்புகள்
**ஆரம்பம்: 14-08-1988**
**BOND INSTITUTION**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-6159)

**கொம்பியூட்டர் பயிற்சி**
யாழ்நகரிலும்! தெல்லிப்பளையிலும்!
**Diploma in Computer Programming in Basic, Advanced Basic & Cobol Courses**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்:**
17-08-88 (Week day Batch - I)
26 08-88 (Week-end Batch - II) - 2 Months

INITIAL FEE: Rs. 400/- Only
★ வடமாகாணத்திலே,IBM உட்பட நவீன Computer களில் கூடிய பயிற்சி மிகத் தரமான முறையில் அளிக்கப்பட்டு. பெறுமதி வாய்ந்த Diploma சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.
Contact:
**IDP**
**Institute of Data Processing**
(9. 30 a.m) 342, K.K.S Road, (சிவன்கோவிலடி) யாழ்ப்பாணம்.
(3. 30 p. m) K.K.S. Road, (துர்க்கையம்மன்கோவிலடி) தெல்லிப்பளை.
(C 6168)



பெருமிதமாக அறிமுகப்படுத்தும் பலவிதமான சீலிங் மின்விசிறிகள்

உஷா ஸ்டாண்டர்ட்
விலை : ரூபா 1500 முதல் 1575/-வரை
● 36''. 42''. 48''. 56'' அளவுகளில்
● ஒரு அடி நீளமான கீழ்த்தண்டு, இணைப்பு வசதிகள் இரப்பர் புஷ்... 2 கவசங்கள், 5 வேக ரெகுலேட்டர் என்பவற்றுடன் பூர்த்தியானது.
● மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

உஷா அலங்கார விசிறிகள்
பொன் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்
விலை ரூ 1,750/= முதல் 1975/= வரை
● தேவைக்கேற்ப ... மண் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
● கோள்வடிவ மின்குமிழ்

தயாரித்து விநியோகிப்போர்: உஷா இன்டஸ்ரீஸ் லிமிடெட் 68, அத்திடிய றோட் ரத்மலானை தொலைபேசி: 71-6922, 71-7934 71-71...

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை மயிலுப்பிள்ளை

திரு. சங்கரப்பிள்ளை மயிலுப்பிள்ளை (இளைப்பாறிய உப அதிபர் ஸ் ந்தவரோதயாக் கல்லூரி) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற விமலாதேவியின் அன்புக் கணவரும், சிவரூபன் (Zambia) சிவகௌரி (Australia) சிவராமன் (India) சிவானந்தி, சிவானந்தன். சிவகுமாரன் (India) ஆகியோரின் அன்புத்தந்தையும், S. கேதாரநாதனின் (Australia) அன்பு மாமனாரும், A சிவயோகநாதன், மைத்துனர் [மின் அத்தியட்சகர், பிரதேச உபஅலுவலகம்- தெல்லிப்பளை] S. சாரதாதேவி மைத்துனி, மல்லாகத்தைச் சேர்ந்த அம்பலவாணர் தங்கம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற A சிவசம்புவின் (யாழ் செயலகம்) சகலனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11. 8 88 வியாழக்கிழமை பிற்பகல் 3. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

- பிள்ளைகள்

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
(C 6160)

## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

### ஆடிப்பூரத் திருவிழா 14-8-88

ஆடிப்பூரத் தினத்தன்று அம்பாளுக்கு நவோத்தர சகஸ்திர மகா (1008 சங்குகள்) சங்காபிஷேகம். பூரகர்மா (ருதுசாந்தி), தீபாராதனை இலட்சார்ச்சனைப் பூர்த்தியும், அதனைத் தொடர்ந்து ஆடிப்பூரத் திருவிழாச் சபையினரால் நிர்மாணிக்கப்பெற்ற அழகிய "தாமரைப்பூ" வாகனத்தில் அம்பாள் வீதியுலாவரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். இசைநாத இரட்டையர்கள் V. K. கானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி சகோதரர்களின் விசேட மேளக் கச்சேரியும், நடைபெறும் அடியார்கள் யாவரையும் உரிய காலங்களில் வருகை தந்து அன்னையை வழிபட்டு இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

குறிப்பு :- அமுதசுரபி அன்னதான சபையில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(5763) **ஆடிப்பூரத் திருவிழாச் சபை.**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road Jaffna on Friday 12th August 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org